<u>அ.வ.எண். 439/2020</u> <u>நாள்: 06.09.2022</u>

<u>வா.சா.1: சாரதாமணி</u>

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

<u>1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

என்னுடைய பங்கு எனக்கு வேண்டும் என்று கேட்டு வழக்கை போட்டுள்ளேன். 1ம் பிரதிவாதி பாலசுப்பிரமணியம் மற்றும் 2ம் பிரதிவாதி ராமகிருஷ்ணன் என் அண்ணன்கள் ஆகும். நான் எந்தெந்த சொத்தில் பாகம் கேட்டு கேஸ் போட்டுள்ளேன் என்று கேட்டால், தோட்டத்தில் பாகம் கேட்டுள்ளேன். நான் தோட்டத்தை தவிர வேறு எந்த சொத்திலும் பாகம் கேட்கவில்லையா என்று கேட்டால், தோட்டத்தில் தான் பாகம் கேட்டுள்ளேன், வேறு சொத்தில் பாகம் கேட்கவில்லை. எனக்கு 10.07.2003ஆம் தேதி திருமணம் நடந்தது. என் கணவரின் ஊர் பெருமால்புதூர் ஆகும். என் திருமணத்திற்கு பிறகு நான் என் கணவரோடு தான் வசித்து வருகிறேன். தாவா சொத்துக்கள் எப்படி பாத்தியம் என்பது எனக்கு தெரியாது என்று சொன்னால், தாவா சொத்துக்கள் என் பாட்டனார் சொத்துக்களாகும், அது பூர்வீக சொத்துக்கள். தாவா சொத்துக்கள் என் பாட்டனாருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு நான் நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் கொடுக்கவில்லை என்று சொன்னால், ஆமாம். தாவா சொத்தில் பல பயிர் செய்யும் தோட்டமும், இளம் தென்னை மரங்களும், வயது முதிர்ந்த தென்னை மரங்களும் இருக்கின்றன என்று சொன்னால், சரிதான். தாவா சொத்தில் எத்தனை ஏக்கரில் வயதான தென்னை மரங்கள் இருக்கின்றன என்று கேட்டால், 2 ஏக்கரில் மட்டும் வயதான தென்னை மரங்கள் இருக்கின்றன. தாவா சொத்துக்களின் மொத்த விஸ்திரனம் 29 ஏக்கர் ஆகும். தாவா சொத்துக்கள் எந்தெந்த சர்வே நம்பர்களில் இருக்கின்றன என்ற சர்வே நம்பர்களின் விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களில் கூட்டுக்கிணறு எந்த சர்வே நம்பரில் இருக்கிறது என்பதும், தனிக்கிணறு எந்த சர்வே நம்பரில் இருக்கிறது என்பதும் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் ஆழ்துளைக்கிணறு எந்த சர்வே நம்பரில் இருக்கிறது என்பது எனக்கு தெரியாது. தாவா சொத்தில் உள்ள கிணறுகள் மற்றும் ஆழ்துளைக்கிணறுக்கு உள்ள

மின்இணைப்பு எண் என்ன என்பது எனக்கு தெரியாது. தாவா சொத்தில் தேங்காய் மூலமும், பழம் வெள்ளாமை மூலமும் மாதம் எவ்வளவு வருமானம் வருகிறது என்பது எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு எவ்வளவு உரம் வாங்கப்பட்டது என்பதும், எவ்வளவு பேர் தாவா தோட்டத்தில் வேலை செய்தார்கள் என்பதும், அவர்களுக்கு எவ்வளவு கூலி கொடுக்கப்பட்டது என்பதும் எனக்கு தெரியாது. நான் என்னுடைய ஆட்களை அழைத்துச் சென்று தாவா சொத்தில் விவசாய வேலை செய்ததில்லை, ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்பு கூட நான் தாவா சொத்திற்கு போய்ட்டு வந்தேன். என் அப்பா எந்த வருடம் இறந்து போனார் என்பது எனக்கு ஞாபகம் இல்லை. என் அம்மா 2 வருடங்களுக்கு முன்பு ஆடி மாதம் 16 ஆம் தேதி ஆங்கில தேதி 31ல் இறந்து போனார். தாவா சொத்துக்கள் உட்பிரிவு செய்யப்பட்டதா இல்லையா என்பது எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள Ex.A.2 சிட்டாவில் எந்தெந்த சர்வே நம்பரில் எவ்வளவு விஸ்திரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. தாவா சொத்தில் எத்தனை ஏக்கரில் தற்போது விவசாயம் செய்யப்படுகிறது என்று கேட்டால், தாவா சொத்து 29 ஏக்கர் முழுவதிலும் தற்போது விவசாயம் செய்யப்படுகிறது. 3ம் பிரதிவாதி HDFC வங்கியில் வாங்கிய ரூபாய் 27,50,000/- கடனை தற்போது 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தான் கட்டிவருகிறார்கள் என்று சொன்னால், ஆமாம், நான் கையொப்பம் மட்டும் தான் போட்டேன், பணத்தை வாங்கவில்லை. நாங்கள் மூவரும் கையொப்பம் போட்டு அந்த கடனை வாங்கினோம் என்றும், அதனால் அந்த கடனை திருப்பி செலுத்துவதில் எனக்கும் பங்கு இருக்கிறது என்று சொன்னால், என்னுடைய பங்கு சொத்து எனக்கு வந்துவிட்டால், நான் என் பங்கு கடனை திருப்பி செலுத்திவிடுவேன். 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வீடு கட்டி வரும் இடம் தாவா சொத்தில் இல்லை, அதற்கு வெளியே தான் இருக்கிறது. எனக்கு திருமணம் ஆகி 20 ஆண்டுகளுக்கு மேலாக நான் என் கணவரோடு தான் இருக்கிறேன் என்றும், அதனால் எனக்கு தாவா சொத்தை பற்றி எதுவும் தெரியாது என்று சொன்னால், சரியில்லை. நான் சொல்லியுள்ளது போல் நான் தாவா சொத்தின் கூட்டு சுவாதினத்தில் இல்லை என்றும், அதனால் தான் எனக்கு தாவா சொத்திலிருந்து எவ்வளவு வருமானம் வருகிறது என்பது தெரியவில்லை என்றும், அதனால் நான் தாவா சொத்தின் கூட்டு சுவாதினத்தில் இருப்பதாக சொல்லுவது பொய் என்று சொன்னால், சரியில்லை. தாவா சொத்தில் 1

ஏக்கர் ரூபாய் 70,00,000/−க்கு விலைபோகும் என்று சாட்சி முதலில் சொல்லிவிட்டு பிறகு 1 ஏக்கர் ரூபாய் 20,00,000/−க்கு விலைபோகும் என்று கூறுகிறார். நான் தாவாவில் சொத்துக்களின் மதிப்பை குறைத்து காண்பித்து குறைந்த நீதிமன்ற கட்டணம் செலுத்தி உள்ளேன் என்றும், அதனால் தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால், ஞாபகம் இல்லாமல் சொல்லியிருப்பேன். நான் 20 வருடங்களுக்கு மேலாக தாவா சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்றும், அதனால் எனக்கு தாவா சொத்தில் பாகம் கேட்கும் உரிமை இல்லை என்று சொன்னால், சரியில்லை. எனக்கு தாவா சொத்தில் பாகம் கேட்கும் உரிமை இல்லை என்றும், அதனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால், சரியில்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.